கூடுதல் சார்பு நீதிமன்றம் – திருச்செங்கோடு
முன்னிலை: திரு. D.மோகன்குமார், B.Com., M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, திருச்செங்கோடு

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04–ம் நாள் திங்கள்கிழமை
IA. No. 05/2023 in OS. No.400/2019

1) கலைவாணி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1) The district Registrar/Deputy Registrar,
Office of the Co–operative Societies.
சுதாகரன் காம்ப்ளக்ஸ், CHB காலனி,
வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் – 637 211.
2) The Co–operative Sub Registrar/Field officer Kabilarmalai,
Block/Sale Officer, Office at Deputy Registrar of Co–operative Societies,
சுதாகரன் காம்ப்ளக்ஸ், CHB காலனி,
வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் – 637 211.
3) The President,
S.1067, Jamin Ellampalli Primary Agricultural Co–opreative Credit Society Ltd.,
ஜமீன் இளம்பிள்ளை மற்றும் அஞ்சல்,
பரமத்தி வேலூர் வட்டம்,
நாமக்கல் மாவட்டம். ...பிரதிவாதிகள்
4) முருகேசன் ...எதிர்மனுதாரர்/உத்ததேசதரப்பினர்

இம்மனு என் முன்னர் 04.08.2025–ம் தேதியாகிய இன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரமனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் கொடுக்கப்பட்டும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், உத்தேரதரப்பினர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பிலும் முன்னிடப்பட்ட வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10–ன் கீழ் 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரை 4–ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். தாவா சொத்து இந்த மனுதாரருக்கு சொந்தமானது. அதில் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார். மனுதாரரின் கணவர் இளங்கோ இளம்பிள்ளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயலாளராக பணியாற்றி வந்தார். அவர் 2013–16–ம் காலகட்டத்தில் மேற்படி கூட்டுறவு வங்கியில் தொகையை கையாடல் செய்தார் என்பதற்காக இந்த 2–ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை ஜப்தி செய்து தற்போது உத்தேசதரப்பினருக்கு விற்பனை செய்து விட்டார். எனவே, உத்தேசதரப்பினரை 4–ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரி இந்த மனு தாக்கல் செய்ப்பட்டுள்ளது.

3) இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடுசெய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4) மனுதாரரின் மனு, மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

5**) தீர்வு :**

இந்த மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வழக்காவணங்களை பரிசீலிக்கையில் 4–ம் பிரதிவாதி கடந்த 29.07.2021–ம் தேதியில் நடைபெற்ற ஏலத்தில் பங்கேற்று தாவா சொத்தினை ரூ.22,57,000/–க்கு ஏலம் எடுத்துள்ளார். அதற்கு ஆதாரமாக ஏல நடவடிக்கைக்கான உத்தரவின் புகைப்பட நகல் மனுவோடு இணைக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது தாவா சொத்தினை ஏலத்தில் எடுத்தவர் என்ற முறையில் தாவா சொத்தில் அவருக்கு உரிமையுள்ளது. எனவே, இந்த வழக்கை தீர்மானிப்பதற்கு 4–ம் பிரதிவாதியும் அவசிய தரப்பினராவார். இந்த மனுவில் 4–ம் பிரதிவவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் அதனை பெற்றுக்கொண்டு 4–ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆகையினால், நீதியின் நலன் கருதி இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025 ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04–ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.08.04 20:20:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

D MOHANKUMAR Digitally signed by D MOHANKUMAR Date: 2025.08.04 20:20:22 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

சார்பு நீதிமன்றம்,திருச்செங்கோடு
அசல்/வரைவு/உத்தரவு
IA. 05/2023 in OS.No.400/2019
நாள்:04.08.2025.